# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

தரம் : 10

**குடியுரிமைக் கல்வி -** I & II

පුරවැසි අධ්‍යාපනය - I & II

நேரம்: 3 மணித்தியாலங்கள்

---

* இவ்வினாப்பத்திரம் 40 வினாக்களைக் கொண்டது.
* ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப எல்லா வினாக்களுக்கும் இவ்வினாப்பத்திரத்திலேயே விடையளிக்குக.

---

1. கிரேக்கத்தின் எதென்ஸ் நகராட்சியின் ஆட்சி நடவடிக்கைகள்
   1. நேரடி ஜனநாயகப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது.
   2. மறைமுக ஜனநாயகப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது.
   3. பிரதிநிதித்துவ ஜனநாயகப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது.
   4. யாப்பு முறையிலமைந்த ஜனநாயகப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

2. கி.பி 15ம் நூற்றாண்டின் பின்பு ஐரோப்பாவில் ஆரம்பமான ஆட்சிமுறை
   1. சமதர்ம ஆட்சிமுறை
   2. லிபரல்வாத ஆட்சி முறை
   3. நவலிபரல்வாத ஆட்சி முறை
   4. தேசிய அரசு

3. கி.பி 1658 இல் ஏற்பட்ட ஆங்கில புரட்சியின் பின்பு
   1. மன்னனின் அதிகாரம் மிக வேகமாக அதிகரித்தது.
   2. பாராளுமன்ற ஆட்சிமுறை வளர்ச்சி கண்டது.
   3. நீதிமன்றத் தொகுதியின் அதிகாரம் வளர்ச்சி கண்டது.
   4. நிறைவேற்று அதிகாரம் செயற்பட்டது.

4. நேரடி ஜனநாயக ஆட்சி முறையினை நடைமுறைப்படுத்துவதிலுள்ள பிரச்சனை
   1. தற்கால அரசுகள் மிகச்சிறியனவாக உள்ளன.
   2. தற்கால அரசுகளின் சனத்தொகை மிக அதிகரித்துள்ளன.
   3. தற்கால அரசுகளில் சமூகத்தேவைகள் சிக்கலடைந்துள்ளன.
   4. சகல பிரஜைகளையும் ஓரிடத்துக்கு ஒன்று சேர்க்க முடியுமாக இருப்பது.

5. இலங்கைக் குடியரசின் இறைமையில் உள்ளடங்கியுள்ள அம்சங்கள்
   1. அடிப்படை உரிமைகள் , ஆட்சி அதிகாரம் , வாக்குரிமை
   2. அடிப்படை உரிமைகள் , ஆட்சி அதிகாரம் , பொறுப்புக்கள்
   3. உரிமைகளுடனான கடமைகள், அடிப்படை உரிமைகள் , வாக்குரிமை
   4. வாக்குரிமை, அடிப்படைக் கடமைகள் , ஆட்சி அதிகாரம்.

6. ஜனநாயக ஆட்சி முறையொன்றின் செயற்பாட்டுக்குத் தேவையற்ற அம்சம் ஒன்று
   1. அரசியல் கட்சி
   2. அரசியல் யாப்பு
   3. எதிர்க்கட்சி
   4. நீதிமன்றம்

7. ஜனநாயக ஆட்சி முறையின் கீழ் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் ஓர் உபாயம்
   1. நாட்டை பல தேர்தல் தொகுதிகளாகப் பிரித்தல்
   2. போட்டிக் கட்சி முறையை நடைமுறைப்படுத்தல்
   3. அரசியல் கட்சிமுறையை முன்னேற்றமடையச் செய்தல்
   4. மக்களின் வாக்குரிமையை அவர்களுக்கு வழங்குதல்

8. சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் ஒன்றின் பண்பு அல்லாதது
   1. குறித்த காலத்திற்கு முன்பு தேர்தல் நடைபெறல்
   2. தேர்தல் சட்டதிட்டங்களுக்கமைய தேர்தல் நடைபெறல்
   3. சுதந்திரமாக தேர்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான உரிமை காணப்படுதல்
   4. சுமுகமான சூழலில் தேர்தல் நடாத்தப்படல்

9. ஜனநாயக ஆட்சி வெற்றி பெறுவதற்கு எதிர்கட்சி நிறைவேற்ற வேண்டிய பொறுப்பும் கடமையும்
   1. ஆளும் கட்சியின் கூடாத செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்
   2. ஆளும் கட்சியின் செயற்பாடுகளை அடிக்கடி விமர்சனம் செய்தல்
   3. மிகச் சிறப்பான மாற்று ஆட்சியை அமைக்க செயற்படுதல்
   4. ஆளும் கட்சியின் கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தல்.

10. மக்கள் தமது சுதந்திரங்களை அநுபவிப்பது
   1. சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு ஆகும்.
   2. தாம் நினைத்தபடி ஆகும்
   3. தனது வாழ்க்கையைப் புரணப்படுத்திக் கொள்வதற்காகும்
   4. சம்பிரதாயங்களுக்கு கட்டுப்பட்டு ஆகும்.

11. சமூகத்தில் கௌரவமான பிரஜையாக வாழ்வதற்கு பிறப்பின் மூலம் கிடைக்கும் உரிமைகள்
   1. அடிப்படை உரிமைகளாகும். 2. சிவில் உரிமைகளாகும்
   3. மனித உரிமைகளாகும். 4. அரசியல் யாப்பு ஆகும்.

12. ஒரு நாட்டில் அடிப்படைச் சட்டமானது
   1. சிவில் சட்டமாகும் 2. ரோமன் டச்சுச் சட்டமாகும்
   3 பொதுச்சட்டமாகும் 4. அரசியல் யாப்பாகும்

13. மக்களின் கருத்துக்களை அரசாங்கத்துக்கு முன்வைக்கும் ஆற்றல் கொண்டது
   1. ஊடகங்கள் 2. எதிர் கட்சி 3.மக்கள் பிரதிநிதி 4.அதிகாரம் பெற்ற குழுக்கள்

14. ஜனநாயக மக்கள் சமூகத்தில் உரிமைகள் பாதுகாப்பு, மற்றும் சுதந்திரம் தொடர்பாக பணியாற்றும் துறை
   1. பொலிஸ் 2. சிவில் சேவை 3. நீதிமன்றம் 4. முப்படைகள்

15. சட்டஆட்சியில் நடைமுறைப்பண்புகளில் ஒன்று
   1. அணைவரும் சட்டத்தை மதித்தல், அதற்கு அடிபணிதல், சட்டத்தை மீறாதிருத்தல்
   2. நடைமுறையிலிருக்கும் சட்டத்திற்கிணங்க சந்தேக நபர்களைத் தண்டித்தல்
   3. குற்றப்பத்திரத்துக்கமைய மட்டுமே ஒருவரைக் கைது செய்தல்.
   4. ஆட்சியாளர்களுக்கு சட்டத்தில் விசேட பாதுகாப்பு வழங்குதல்

16. தேசிய அரசுகள் பலமடைவதற்குக் காரணமாக இருந்த அரசியல் சிந்தனையாளர்கள்
   1. மாக்கியவல்லி , ஜீன்போடின் 2. தோமஸ் ஹொப்ஸ், அரிஸ்டோட்டல்
   3. பிளேட்டோ, ஜின்போடின் 4. மாக்கிவல்லி , அரிஸ்டோட்டல்

- பின்வரும் கூற்றுக்களை வாசித்து 17, 18 ம் வினாக்களுக்கு விடை தருக.
  A. சமூக பழக்க வழக்கங்களைக் கடைபிடித்தல் B அரசுக்குரிய வரியைச் செலுத்தல்
  C . பெரியோரை மதித்தல் D நடைமுறையிலுள்ள சட்டங்களை மதித்தல்
  E சட்டம் மற்றும் சமாதானத்தைப் பாதுகாக்க உதவுதல் F பெற்றோரைக் கவனித்தல்

17. மேலுள்ள கூற்றுக்களுள் பண்பாட்டு ரீதியிலா கடமைகளை மட்டும் கொண்ட விடை
   1. A,B,C 2. A,C,F 3. B,C,E 4. C,D,B

18. மேலுள்ள கூற்றுக்களுள் சட்ட ரீதியிலா கடமைகளை மட்டும் கொண்ட விடை
   1. A,B,C 2. A,C,F 3 B,D,F 4. C,D,F

19. தேர்தல் ஒன்றின் போது பொருத்தமான ஓர் அரசாங்கத்தைத் தெரிவு செய்வதில் முக்கிய பங்கு வகிப்போர்
   1. பொதுமக்கள் 2. வாக்காளர்கள் 3. தேர்தல் வேட்பாளர்கள் 4. சிவில் பிரஜைகள்

20. சனநாயக ஆட்சி முறையின் வெற்றிக்கு சனநாயக பிரஜைகளிடம் காணப்படவேண்டிய முக்கிய பண்புகள் கொண்ட விடையைத் தெரிவு செய்க
   A. கலந்துரையாடல் மூலம் தீர்மானமெடுத்தல் B. எதிர் கருத்துக்களை சகித்துக் கொள்ளல்
   C. ஒத்துழைப்புடன் செயற்படுதல் D. சிறுபான்மையினர் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல்
   1. A,B 2. B,D 3. B,C 4. C,D

21. மக்களின் நிறைவேற்றுத்துறை அதிகாரத்தை செயற்படுத்துவது
    1. பாராளுமன்றம் மூலம்
    2. பொதுமக்கள் மூலம்
    3. பாராளுமன்றம் மூலமும் பொதுமக்கள் மூலமும்
    4. ஜனாதிபதி மூலம்

22. சனநாயக சமூகமொன்றில் மக்கள்
    1. அதிகாரத்தின் ஆரம்ப உரிமையாளர்களாவர்
    2. அதிகாரத்தின் பிரதான உரிமையாளர்களாவர்
    3. அதிகாரத்தின் இறுதி உரிமையாளர்களாவர்
    4. அதிகாரத்தைச் செயற்படுத்துவதற்கு பொறுப்புடையவர்களாவர்

23. பொருளாதார முறையொன்றில் அதிகாரம் பெற்ற குழுவினரால் ஏனையோரை வழி நடாத்துவதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சியே அதிகாரமாகும் என்பது
    1. சமூகவியல் ரீதியிலான வரைவிலக்கணமாகும்
    2. பொருளாதார நிபுனர்களின் வரைவிலக்கணமாகும்
    3. அரசியல் ரீதியான கண்ணோட்டத்தின் படியிலான வரைவிலக்கணமாகும்
    4. வருடாந்த கொள்கையின் அடிப்படையில்

24. மத்திய அரசுக்கும் மாகாண சபைக்கும் இணைப்பாளராக செயற்படுபவர்
    1. ஜனாதிபதி
    2. முதலமைச்சர்
    3. மாகாண ஆளுநர்
    4. பிரதம மந்திரி

- கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களை அவதானித:து 25ம் 26ம் வினாக்களுக்கு விடை தருக
  - A. மாகாண வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல்
  - B. மாகாண சபையின் கொள்கைகளை அனுமதித்தல்
  - C. மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்தி நிர்வாக திட்டமிடல் என்பவற்றை தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்
  - D. மாகாணசபையில் உரையாற்றுதலும் செய்திகளை அனுப்புதலும்
  - E. மாகாண சபைகளைக் கூட்டுதல் தவணைகளை முடிவுறுத்தல் கலைத்தல்
  - F. மாகாணத்தின் நிர்வாகத்தைத் திட்டமிடல்

25. மாகாண ஆளுநரின் அதிகாரங்கள் அடங்கிய விடையைத் தெரிவு செய்க
    1. A,B,C
    2. B,D,E
    3. D,E,F
    4. A,B,E

26. முதலமைச்சரின் அதிகாரங்கள் அடங்கிய விடையைத் தெரிவு செய்க
    1. A,C,F
    2. B,D,F
    3. D,E,F
    4. C,E,F

27. உள்ளுராட்சி மன்றமொன்றின் கொள்கை உருவாக்கம் செய்யும் அலகு
    1. பிரஜைகள் சபை
    2. பொதுச்சபை
    3. குடியுரிமை அலகு
    4. செயற்பாட்டு அலகு

28. ஐக்கிய அமெரிக்கா சமஷ்டி அரசாக உருவெடுத்தமைக்கான காரணம்
    1. சனத்தொகை அதிகரித்தமை
    2. நிலப்பரப்பு விசாலமாக இருந்தமை
    3. சமூக தேவைகள் சிக்கலடைந்தமை
    4. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியிருந்தமை

29. ஐக்கிய அமெரிக்காவின் சட்டமன்றம் எவ்வாறு அழைக்கப்படும்?
    1. செனற் சபை
    2. காங்கிரஸ் சபை
    3. பிரதிநிதிகள் சபை
    4. அரச சபை

30. பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மன், ஆஸ்திரியா ஆகிய நாடுகளுக்கு மத்தியில் அமைந்துள்ள நாடு
    1. அமெரிக்கா
    2. வடகொரியா
    3. பிரித்தானியா
    4. சுவிட்சர்லாந்து

31. பண்பாடு பற்றிய கருத்தை முன்வைத்த சிந்தனையாளர்
    1. T.B. டெய்லர்
    2. டோனால்ட் வுல்ப்
    3. J.R லெவல்
    4. சீலர்

32. குறியீட்டு ரீதியாக சமூகம் உரித்தாக்கிக் கொண்டுள்ளதும் பாரம்பரியமாக தனதாக்கிக் கொண்டதுமான சகல விதமான நடத்தைக் கோலங்களுக்கும் வழங்கக் கூடிய கூட்டான பெயர்
    1. அறிவு 2. கொள்கை 3. கலாச்சாரம் 4. பண்பாடு

33. சமூக நீதி வீழ்ச்சியடைந்துள்ளமைக்கான காரணங்களில் ஒன்று
    1. இலஞ்சம் ஊழல் வீழ்ச்சியடைந்துள்ளமை 2. அரச நிர்வாகிகள் பொறுப்புடன் செயற்படுதல்
    3. அரச நிர்வாகம் வினைதிறனாக இருத்தல் 4. அரச சேவைகள் அரசமயமாக்கப்பட்டிருத்தல்

34. நல்லாட்சி என்பதனால் கருதப்படுவது
    1. அரச கொள்கைத் தீர்மானம் தொடர்பான செயற்பாடாகும்
    2. அரச கொள்கைகளை செயற்படுத்தல் தொடர்பான செயற்பாடாகும்
    3. அரச கொள்கைத் தீர்மானம் மற்றும் அரச கொள்கைகளை செயற்படுத்தல் தொடர்பான செயற்பாடாகும்
    4. இவை எதுவுமல்ல

- கீழே தரப்பட்டள்ள கூற்றுக்களை அவதானித்து 35ம் 36ம் வினாக்களுக்கு விடை தருக
  A. விஜயனும் தோழர்களும் வருகை தந்தமை
  B. பண்டுவாசுதேவனும் குழுவினரும் வருகை தந்தமை
  C. சேனன் குத்திகன் வருகை
  D. பத்தகச்சானாவும் சகோதரர்களும் வருகை
  E. காலிங்க மாகன் வருகை
  F. பண்டு பாரிந்த குழுவினரின் வருகை

35. மேலுள்ள கூற்றுக்களுள் குடிபொயர்வுக்கு உதாரணமாக அமையும் விடை
    1. A,B,C 2. A,B,D 3. B,C,D 4. C,D,F

36. மேலுள்ள கூற்றுக்களுள் ஆக்கிரமிப்புக்கு உதாரணமாக அமையும் விடை
    1. A,B,C 2. B,C,D 3. C,E,F 4. C,D,F

37. கீழ்வரும் கூற்றுக்களை வாசித்து நல்லாடசியின் பண்புகள் அடங்கிய விடையைத் தெரிவு செய்க
    A. பொறுப்புடன் செயற்படுதல்
    B. தனியுரிமையைச் செயற்படுத்தல்
    C. உரிமைகள் பாதுகாக்கப்படுதலும் உறுதிப்படுத்தப்படுதலும்
    D. சட்டத்துக்கு மதிப்பளித்தல்
    1. A,D 2. B,C 3. C,D 4. B,D

38. பல்வேறு மொழிகளைக் கற்று அவற்றை பயன்படுத்தல்
    1. பொருளாதார உரிமையாகும் 2. அரசியல் உரிமையாகும்
    3. சிவில் உரிமையாகும் 4. சமூக மற்றும் பண்பாட்டு உரிமையாகும்

39. பல்பண்பாட்டுச் சமூகம் என்பது
    1. ஒரு நாட்டில் பல இனத்தவர்கள் வாழுதல்
    2. ஒரு இனத்துக்கு ஒரு நாடு என்பதாகும்
    3. ஒரு இனத்துக்கு பல நாடு என்பதாகும்
    4. சகல நாடுகளும் பொதுவான ஒரு முறையில் செயற்படுவது என்பதாகும்

40. பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் மக்கள் ஒற்றுமையுடன் செயற்படுவதன் மூலம்
    1. முரன்பாடுகளைக் குறைக்கலாம்
    2. முரன்பாடுகள் ஏற்படுவதற்கான காரணங்களைத் தற்காலிகமாக தவிர்க்கலாம்
    3. தேசிய ஐக்கியம் பாதிப்படையும்
    4. நாட்டின் அபிவிருத்திக்காக சகல பிரஜைகளும் ஒற்றுமையாக செயற்படுவர்

(40x2=80 புள்ளிகள்)

## பகுதி II

♦ **முதலாம் வினா கட்டாயமானது. ஏனைய வினாக்களில் இருந்து 4 வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1) 1. கிரேக்கத்தில் நேரடி சனநாயக ஆட்சியில் பங்கு கொள்ள சந்தர்ப்பம் கிடைக்காத இரு தரப்பினரைப் பெயரிடுக.
2. மறைமுக சனநாயகம் தொடர்பாக வரைவிலக்கணம் வழங்கியுள்ள இரு சிந்தனையாளர்களைப் பெயரிடுக.
3. சனநாயக ஆட்சி முறை முக்கியத்துவமுடையதாக இருப்பதற்கான காரணங்கள் இரண்டு தருக.
4. தற்போதைய அரசியல் யாப்பின் படி சட்டசபையின் செயற்பாடுகள் இரண்டு தருக.
5. தற்கால அரசுகளில் செயற்படுத்தப்படும் அரசாங்க முறைகள் இரண்டும் எவை?
6. சமஷ்டி ஆட்சி நிலவும் இரு நாடுகளைக் குறிப்பிடுக.
7. மாகாண சபையொன்றின் அதிகாரங்களும் தொழிற்பாடுகளும் வகுக்கப்பட்டுள்ள முறைகள் இரண்டு எழுதுக.
8. சுவிட்சர்லாந்தில் கெண்டன்களுக்குரிய அதிகாரங்கள் இரண்டு தருக.
9. பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தின் அடிப்படைப் பண்புகள் இரண்டு எழுதுக.
10. தற்காலத்தில் பன்மைப் பண்பாட்டுச் சமூகத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டான நாடுகள் இரண்டு எழுதுக

(2x10=20 புள்ளிகள்)

2) 1. கட்சி முறையின் பல்வேறுபட்ட முறைகளுள் இரண்டினை எழுதுக. (2 புள்ளிகள்)
2. ஒரு கட்சி முறை நிலவும் நாடுகள் மூன்று குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
3. அரசியல் கட்சி முறையின் அனுகூலங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

3) 1. அரசின் பிரதான மூலக் கூறுகள் இரண்டு குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
2. தேசிய அரசுகளின் பிரதான பண்புகள் மூன்று எழுதுக. (3 புள்ளிகள்)
3. அரசின் பொறுப்புக்கள் மூன்றினைக் குறிப்பிட்டு அதில் ஒன்றினை விளக்குக (5 புள்ளிகள்)

4) 1. அதிகாரத்தின் வகைகள் இரண்டு குறிப்பிடுக (2 புள்ளிகள்)
2. நவீன அரசுகளில் அதிகாரப் பங்கீடு செய்வதற்கான காரணங்கள் மூன்று எழுதுக. (3 புள்ளிகள்)
3. அ) ஒற்றையாட்சி முறையொன்றின் பண்புகள் மூன்று எழுதுக. (3 புள்ளிகள்)
ஆ) சமஷ்டி ஆட்சி முறையொன்றின் பண்புகள் இரண்டு எழுதுக. (2 புள்ளிகள்)

5) 1. இலங்கையில் அதிகாரம் பரவலாக்கப்பட்டிருந்தமைக்கான வரலாற்று ரீதியான ஆதாரங்கள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)
2. இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
3. அ) இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் நிறுவப்பட்டமைக்கான காரணங்கள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)
ஆ) இவற்றுள் ஒரு நிறுவனத்தின் பிரதான தலைவரைக் குறிப்பிட்டு அவரின் அதிகாரங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

6) 1. பன்மைப் பண்பாட்டுச்சமூகம் நிலவும் நாடுகள் இரண்டு குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
2. இலங்கையில் பண்மைப்பண்பாட்டுச் சமூகம் உருவாவதில் செல்வாக்கச் செலுத்தும் காரணிகள் மூன்று எழுதுக. (3 புள்ளிகள்)
3. பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் மக்கள் ஒற்றுமையுடன் செயற்படுவதனால் ஏற்படும் நன்மைகள் மூன்றினைக் குறிப்பிட்டு அதில் ஒன்றினை விளக்குக. (5 புள்ளிகள்)

7) 1. மனிதனின் அரசியல் உரிமைகள் இரண்டு எழுதுக. (2 புள்ளிகள்)
2. நல்லாட்சியின் அடிப்படைப் பண்புகள் மூன்று எழுதுக. (3 புள்ளிகள்)
3. பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் நல்லாட்சியைச் செயற்படுத்துவதினால் ஏற்படும் நன்மைகள் மூன்று குறிப்பிட்டு அதில் ஒன்றினை விளக்குக. (5 புள்ளிகள்)